**செய்தி வெளியீடு எண்: 652** **நாள்:09.09.2020**

**<u>இன்று (9.9.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தலைமையில் விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தடுப்புப் பணிகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை:</u>**

அனைவருக்கும் வணக்கம்.

விழுப்புரம் மாவட்டத்தில், கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவலை தடுப்பதற்கு மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மாவட்ட நிர்வாகத்திற்கு துணையாக சுகாதாரத் துறை, உள்ளாட்சி துறை இணைந்து பணியாற்றி வருகிறார்கள். அரசால் அறிவிக்கப்பட்ட வழிமுறைகளை சிறப்பான முறையில் பின்பற்றி நடவடிக்கை எடுத்த காரணத்தால் விழுப்புரம் மாவட்டத்தில் படிப்படியாக வைரஸ் நோய்த் தொற்று குறைந்து வருகிறது.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு தேவையான மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் இந்த மாவட்டத்தில் உள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய முறையில் சிகிச்சை அளிப்பதற்கு மருத்துவமனையில் போதிய படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தேவையான மருத்துவ உபகரணங்கள் கையிருப்பில் உள்ளன. இந்நோய்த் தொற்றைத் தடுப்பதற்கு ஏற்கனவே மருத்துவ வல்லுநர்கள் குறிப்பிட்டவாறு, மாவட்ட அளவில் காய்ச்சல் முகாம்கள் நடத்தவேண்டும் என்ற ஆலோசனை மாவட்ட நிர்வாகத்திற்கு வழங்கப்பட்டதன் அடிப்படையில் விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. அதன்மூலம், பல்லாயிரக்கணக்கானோர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, தொற்று அறிகுறி உள்ளவர்களை மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்து குணப்படுத்துகிறார்கள். அதுமட்டுமல்லாமல், எந்தவொரு பகுதியிலும் தொற்று ஏற்பட்டால் அதை, மாவட்ட நிர்வாகம், சுகாதாரத் துறை, உள்ளாட்சித் துறை, காவல் துறையின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் உடனடியாக அந்தப் பகுதிக்கு நடமாடும் மருத்துவக் குழுவை அனுப்பி, அந்தப் பகுதி மக்களுக்கு பரிசோதனை செய்து, தொற்று அறிகுறி உள்ளவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இவ்வாறு பல்வேறு வகைகளில்

நடவடிக்கைகள் எடுக்கப்படுகிற காரணத்தால் விழுப்புரம் மாவட்டத்தில் வைரஸ் தொற்று பரவல் கட்டுக்குள் இருக்கிறது.

தமிழகம் முழுவதும் 2000 மினி கிளினிக் ஆரம்பிக்கப்படும். மினி கிளினிக்கில் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு உதவியாளர் ஆகியோர் இருப்பர். கொரோனா வைரஸ் நோய்த் தொற்று இருக்கும் இந்த சூழ்நிலையில், காய்ச்சல், தலைவலி போன்றவை ஏற்பட்டால் கூட, அதற்கு சிகிச்சை பெற சிரமமாக உள்ளது. இந்தக் குறைகளைப் போக்க வேண்டுமென்பதற்காக, மாண்புமிகு அம்மாவின் அரசு, இந்த அற்புதமான புதிய திட்டமான மினி கிளினிக்குகளை விரைவில் உருவாக்க இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவிக்க விரும்புகிறேன். மினி கிளினிக்கிற்கு தேவையான மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படும். இதனால் கடுமையான நோயால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிந்து அவர்களை மேல் சிகிச்சைக்காக மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கமுடியும். இதனால் ஏழை, எளிய மக்கள் மற்ற நோய்களிலிருந்து விடுபடுவதற்கு இது ஒரு வாய்ப்பாக அமையும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

விழுப்புரம் மாவட்டத்தின் பிரதான தொழிலான வேளாண் தொழிலை நம்பி சுமார் 70 சதவிகித விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். விழுப்புரம் மாவட்டத்தில் நெல், கரும்பு, கடலை, சிறுதானியங்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. மேலும், சென்னைக்கு அருகில் இருக்கின்ற காரணத்தினால் விவசாயிகள் அதிக வருமானம் பெறுவதற்காக காய்கறிகளை அதிகளவில் பயிரிடுகிறார்கள். அதுமட்டுமல்லாமல், திருவெண்ணெய்நல்லூர் பகுதியில் கொய்யாப்பழம் அதிகளவு விளைவிக்கப்பட்டு, விற்பனைக்கு பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இவ்வாறு உழைப்பிற்கு பெயர் பெற்ற மாவட்டம் விழுப்புரம் மாவட்டம்.

மாண்புமிகு அம்மாவின் அரசு விவசாயிகளுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. விவசாயிகளுக்கு பயிர்க்கடன், இடுபொருட்கள் போன்றவற்றை உரிய நேரத்தில் வழங்கியதன் விளைவாகவும், நல்ல மழை பொழிந்த காரணத்தினாலும், தமிழகத்தில் இந்த ஆண்டு உணவு தானிய விளைச்சல் அதிகமாகி வேளாண் பெருமக்கள் நிம்மதியாக இருக்கக்கூடிய சூழ்நிலையை நாம் பார்க்கின்றோம்.

அதுமட்டுமல்லாமல் மாண்புமிகு அம்மாவின் அரசால் அறிவிக்கப்பட்ட அற்புதமான திட்டமான குடிமராமத்துத் திட்டத்தை விழுப்புரம் மாவட்டத்தில் சிறப்பான முறையில் செயல்படுத்தியதன் விளைவாக பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் ஒரு சொட்டு கூட வீணாகாமல் தேக்கி வைக்கக்கூடிய சூழ்நிலையை நாம் பார்க்கின்றோம். மாண்புமிகு அம்மாவின் அரசு கடந்த மூன்றாண்டுகளில் 126 குடிமராமத்துப் பணிகள் பொதுப்பணித்துறையின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு, அதற்காக சுமார் ரூபாய் 20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பெரும்பாலான பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

அதோடு, விழுப்புரம் மாவட்டத்தில், பல்வேறு இடங்களில் தடுப்பணைகள் கட்டப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் கட்டப்பட்டு வருகிறது. இன்னும் பல தடுப்பணைகள் கட்டுவதற்கு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

**திண்டிவனம் வட்டம், விடூர் அணையை சுமார் ரூபாய் 43 கோடி மதிப்பீட்டில் புனரமைத்தல் மற்றும் தூர்வாரி சீரமைக்கின்ற பணி துவங்கவிருக்கிறது. அதேபோல, நந்தன் கால்வாய் திட்டம், சுமார் ரூபாய் 27 கோடி மதிப்பீட்டில் சாத்தூர் அணையிலிருந்து நந்தன் கால்வாயை இணைக்கின்ற திட்டப் பணி விரைவில் துவங்கவிருக்கிறது. அதேபோல, வானூர்–திருவக்கரையில் 50 ஏக்கர் பரப்பளவில் கல்மரப் பூங்கா அமைப்பதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.**

**அந்தப் பணியும் விரைவில் துவங்க இருக்கிறது. விழுப்புரம் மாவட்டத்தில் வானூரில் அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரி இந்த ஆண்டு துவக்கப்பட்டு, இந்த ஆண்டே மாணவர் சேர்க்கை நடைபெறும். மேலும், 6 அரசு மற்றும் அறிவியல் கல்லூரிகள் தோற்றுவிக்கப்படவுள்ளன. அரியலூர் மாவட்டத்தில் ஜெயங்கொண்டம், நாகப்பட்டினம் மாவட்டத்தில் குத்தாலம், இராணிப்பேட்டை மாவட்டத்தில் சோளிங்கர், விருதுநகர் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர், கோவை மாவட்டத்தில் புளியங்குளம், கரூர் மாவட்டத்தில் கிருஷ்ணராயபுரம் வட்டம், தரகம்பட்டி ஆகிய இடங்களிலும், என மொத்தம் 7 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இந்த ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு, இந்த ஆண்டே மாணவர் சேர்க்கையும் நடைபெறும்.**

கிராமப்புறங்களிலுள்ள ஏழை, எளிய குடும்பத்திலுள்ள திறமையான மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெற்றாலும் தனியார் கல்லூரிகளில் படிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது, எனவே, அப்படிப்பட்ட மாணவர்களும் உயர்கல்வி கற்க வேண்டும்

என்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் 76 அரசு கலைக் கல்லூரிகளைக் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு அம்மாவின் அரசு தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை கொடுத்துக் கொண்டே இருக்கிறது. அதனால் இந்தியாவிலேயே உயர்கல்வி படிக்கக் கூடியவர்களின் எண்ணிக்கையில் தமிழகம் முதன்மையாக திகழ்கின்றது. ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகள் தரம் உயர்த்தப்படுவதால் அந்த பகுதிகளிலுள்ள பள்ளிகளிலேயே மாணவர்கள் சேர்ந்து படிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியதன் விளைவாக ஆரம்பக் கல்வி முதல் உயர்நிலைக் கல்வி வரை கல்வி கற்போரின் எண்ணிக்கையும் தமிழகத்தில் உயர்ந்திருக்கிறது.

விழுப்புரம் மாவட்டத்தில், 53 பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் இன்றையதினம் வழங்கப்பட்டிருக்கிறது. விழுப்புரம் நகரத்தில் ஏற்கனவே பாதாள சாக்கடைத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இன்னும் விரிவுபடுத்தப்பட்ட பகுதியில் ரூபாய் 263 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. திண்டிவனம் நகராட்சியில் ரூபாய் 268 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. விழுப்புரம் நகராட்சி நூறு ஆண்டுகள் நிறைவு பெற்றதையொட்டி, அடிப்படைத் தேவைகளுக்காக ரூபாய் 50 கோடி சிறப்பு நிதியாக ஒதுக்கீடு செய்து, பெரும்பாலான பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன. மரக்காணம் வட்டம், கழுவேலி ஏரியை சீரமைக்கும் பணிக்கும், கடல்நீர் உட்புகாமல் இருப்பதற்கும் ரூபாய் 161 கோடி மதிப்பீட்டில் பணி துவங்குவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. திண்டிவனத்தில் சிப்காட் சார்பாக உணவுப் பூங்கா ஒன்று அமைக்க ரூபாய் 2500 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்பட்டு 4,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக் கூடிய வகையில் சூழ்நிலை உருவாகும். இதற்காக 280 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள மாணவ, மாணவியர்கள் சட்டம் பயிலுவதற்கு ஏதுவாக ஒரு புதிய சட்டக் கல்லூரி கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், அந்த சட்டக் கல்லூரிக்கு ரூபாய் 5 கோடி செலவில் நூலகத்தை கட்டித் தந்திருக்கின்றார். 2017–2018ல் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி விழுப்புரத்தில் கொடுக்கப்பட்டது. விழுப்புரம் மாவட்டத்தில், பி.எட் கல்லூரிக்கு கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. விரைவில் பி.எட் சேர்க்கை நடைபெறுவதற்கு அரசு நடவடிக்கை

எடுக்கும். இங்கு இயங்கி வரும் திறந்தவெளி பல்கலைக் கழகத்திற்கு புதிய கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது.

வேளாண் தொழில் அதிகமாகவுள்ள இந்த மாவட்டத்தில் விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் கள்ளக்குறிச்சி மாவட்டத்தையும் உள்ளடக்கிய விழுப்புரம் மாவட்டத்தில், கடந்த ஆண்டுகளில் **3.41** இலட்சம் விவசாயிகளுக்கு ரூபாய் **293.35** கோடி இழப்பீட்டுத் தொகை பெற்றுத் தரப்பட்டுள்ளது. இது மிகப்பெரிய வரலாற்றுச் சாதனை. இதற்கு முன்பு இவ்வளவு பெரிய தொகையை இழப்பீடாக பெற்றுத் தந்த சரித்திரம் கிடையாது. அந்தச் சரித்திரத்தை அம்மாவின் அரசு படைத்துள்ளது. நுண்ணீர் பாசனத் திட்டத்தின் மூலம் கடந்த **4** ஆண்டுகளில் ரூபாய் **210.03** கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது. **2020–21**ல் இந்த நுண்ணீர் பாசனத் திட்டத்திற்காக விழுப்புரம் மாவட்டத்திற்கு ரூபாய் **90.66** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **2016–2017**ஆம் ஆண்டில் விழுப்புரம், கள்ளக்குறிச்சி இணைந்திருந்த காலத்தில் **40** ஆண்டு காலம் இல்லாத கடும் வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்ட **54,434** விவசாயிகளுக்கு ரூபாய் **80.60** கோடி மானியமாக அம்மா அரசால் வழங்கப்பட்டுள்ளது. தமிழக வரலாற்றிலேயே வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கிய ஒரே அரசு அம்மாவின் அரசு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கத்தில் ரூபாய் **53** கோடியே **56** இலட்சத்து **44** ஆயிரம் செலவில் பல்வேறு பணிகள் செயல்படுத்தப்பட்டு **77,370** விவசாயிகள் இத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர். **பெலாக்குப்பம் பகுதியில் ரூபாய் 25 கோடியே 56 இலட்சம் மதிப்பீட்டில் உணவுப்பூங்கா ஒன்று அமைக்க திட்ட மதிப்பீட்டுப் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.** செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் பல அடுக்கு கிட்டங்கி ரூபாய் **15** கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது.

நீண்ட, நெடிய நாட்களாக விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலுள்ள குடிநீர்ப் பிரச்சனைகளைத் தீர்க்க மரக்காணம் அருகிலுள்ள கூனிமேட்டில் ரூபாய் **1,450** கோடி மதிப்பீட்டில் **60** மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரை

குடிநீராக்கும் திட்டம் விரைவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம் விழுப்புரம், திண்டிவனம் நகராட்சிகள், மரக்காணம், வானூர், மயிலம், விக்கிரவாண்டி, காணை ஒன்றியங்களிலுள்ள 692 குடியிருப்புகளைச் சேர்ந்த சுமார் 7.50 இலட்சம் மக்கள் குடிநீர் வசதி பெறுவார்கள்.

இவ்வாறு எந்தவொரு ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. நெடுஞ்சாலைத் துறையில் பல்வேறு சாலைப் பணிகள், பாலப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விழுப்புரம் மாவட்டத்திற்குத் தேவையான அனைத்துத் திட்டங்களையும் அம்மாவின் அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களும் இம்மாவட்டத்தின் வளர்ச்சிக்காக பல்வேறு கோரிக்கைகளை தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 20 ஆண்டு காலம் செய்ய வேண்டிய திட்டங்களை 4 ஆண்டுகளில் செய்து முடித்த அரசு அம்மாவின் அரசு என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகிறேன்.

நன்றி, வணக்கம்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**